பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருளிய

ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சகம்

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2005

ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சக மாண்பு

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளுக்கு இவ்வுலகிலுள்ள வஸ்துக்களில் ஏதாகிலும் ஒன்றில் ஈடுபாடு உண்டென்றால் அது, பரமான்ம சொரூபமாகவும் கடவுளாகவும் விளங்கும் அருணாசலமேயாகும். (அண்ணாமலையென் ஆன்மா என்று இதையே அவர் ஆன்ம வித்தை கீர்த்தனையில் குறிப்பிடுகிறார்.)

அருணாசலத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி அவர் கூறுங்கால், ஆன்ம சொரூபத்திலேயே எல்லாம் அடங்கியுள்ளது. உலகத்தைக் காண, காண்பான் ஒருவன் இருக்க வேண்டும். எல்லாம் தானேயாகிய ஆன்மாவையன்றி உலகம் என்று ஒரு வஸ்து தனியாக இல்லை என்று குறிப்பிடுவார். அனன்ய பாவத்துடன் அவர் ஸ்ரீ அருணாசலேச்வரரைத் துதிசெய்துள்ள ''ஸ்ரீ அருணாசல ஸ்துதி பஞ்சகம்'' இரண்டற்று விளங்கும் பரமான்ம சொரூபத்தையே நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

(தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம் பார்க்க)

ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சகம்

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை

முதற்பதிப்பு – 1998

பதிப்பாளர் :
வி.எஸ். ரமணன், தலைவர்,
ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை.

விலை : ரூபாய் 5/-

அச்சுக்கோர்வை:
ரெப்ளிகா, சென்னை – 600 004.

அச்சிட்டோர்
நாகராஜ் அண்டு கம்பெனி (பிரைவேட்) லிட்., சென்னை - 600 096

ஓம்

நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

பதிப்புரை

பூமண்டலத்தின் இதயமாய், தேஜோலிங்க சுயம்புவாய், ஞானத் திரளாய், கருணைக் கடலாய், நினைக்க முக்தி அருளும் ஸ்ரீ அருணாசலம் ஒளிரும் உயர்வற உயர்ந்த திருத்தலத்தின்கண், ஞான வள்ளலான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியேயான ஸ்ரீ ரமண பகவான் திருமேனி தாங்கி விளங்கியபோது, தமது அடியார்கள் அனைவரும் ஸ்ரீ அருணாசல பக்தியில் ஈடுபட்டு உய்வதற்காக அருளிச்செய்த உபாயங்கள் பலவாம். அவற்றுள் அவர் அருளிய அருணாசல ஸ்துதிபஞ்சகமே தலை சிறந்ததும்,

எளியதும், அடியார்க்கு ஆராத இன்பமருளும் அமுதமாக விளங்குவதுமாம். ஞானமும் பக்தியும் இணைபிரியாது இலங்கும் இத்தீந்தமிழ்ப் பாமாலையை ஸ்ரீ பகவான் அருளிய நாள்முதல் இதுவரை பதம் பிரிக்காத செய்யுள் வடிவிலேயே, இப்பாடல்கள் இடம்பெற்ற எல்லா நூல்களிலும் வெளியிட்டு வந்துள்ளோம். செய்யுள் நடையை அதிகம் பயிலாதவரும், சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்ல இப்போது இத்துதிநூலைப் பதம் பிரித்த வடிவில் அச்சிட்டுக் கையடக்கப் பிரதியாக வெளியிடுகின்றோம்.

ஒருமைப்பட்ட மனத்துடன் இத்துதிநூலை ஓதியவண்ணம் கிரிவலம் செய்வது, முக்கரணங்களாலும்

அருணாசலனை வழிபடும் மிகச் சிறந்த சாதனமாகும். இந்நூலை அகங்குழைந்து அனுதினமும் பாராயணம் செய்யும் அன்பர்கள் அண்ணாமலை அண்ணல் அருளால் ஆனந்த வெள்ளத்தில் திளைப்பர்.


வெளியிட்டோர்.

(குறிப்பு : இதிலுள்ள பாடல்களின் பொருள், பாவம் ஆகியவற்றைப் பிழையறக் கற்றுணர்ந்தபின் இந்நூலை அதன் மூலவடிவில் பாடுவதே சாலச் சிறந்ததாம்.)

பொருளடக்கம்



பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி



கருணார் ணவமாய்க் கருதக் கதிநல்கு
அருணா சலசிவம் ஈதாம். — ஸ்ரீ பகவான்

ஸ்ரீ அருணாசல தத்துவம்

புத்தி அகங்காரம் புலம்பெய்த ஓங்கும்
மத்தி இதயம்தான் மறையவனும் மாலும்
நத்த அறியாது நலம் குலைய அன்னார்
மத்திஒளிர் **அண்ணாமலையினது** மெய்யே.

– முருகனார்

தீபதர்சன தத்துவம்

இத்தனுவே நான் ஆம் எனும் மதியை நீத்து அப்
புத்தி இதயத்தே பொருந்தி அகநோக்கால்
அத்துவிதமாம் மெய் அகச்சுடர் காண்கை பூ
மத்தி எனும் **அண்ணாமலைச்** சுடர் காண் மெய்யே.

ஸ்ரீ அருணாசல மாகாத்மியம்

நந்தி வாக்கு

(விருத்தம்)

1. அதுவே தலம் அருணாசலம் தலம் யாவிலும் அதிகம்
அது பூமியின் இதயம் அறி; அதுவே சிவன் இதயப்
பதியாம் ஒரு மருமத்தலம் பதியாம் அவன் அதிலே
வதிவான் ஒளி மலையா நிதம் அருணாசலம் எனவே.

(வெண்பா)

2. ஆதி அருணாசலப்பேர் அற்புத லிங்கத்து உருக்கொள்
ஆதிநாள் மார்கழியில் ஆதிரைஅச் — சோதி எழும்
ஈசனை மால் முன் அமரர் ஏத்தி வழிபட்ட நாள்
மாசி சிவராத்திரியாம் மற்று.

சிவ வசனம்

(விருத்தம்)

3. அங்கி உருவாயும் ஒளி மங்கு கிரியாகத்
தங்கல் அருளால் உலகம் தாங்குவதற்கு அன்றி
இங்கு உறைவன் சித்தன் என என்றும் எனது உள்ளே
பொங்கி ஒளிரும் குகை பல் போகமொடு என்று உள்ளே.

(வேறு)

4. எல்லா உலகும் தகை அவ் இயலால்
பொல்லா வினைகள் ருணமாம் புகல் ஈது
இல்லாதது ஆம் எது கண்ணுறலால்
எல்லார் அருணா சலமாம் இதுவே.

(வேறு)

5. உருத்தெரி எல்லை உற்று கண் உற்றால்
கருத்தினால் தூரக் கருதினா லும்மே
வருத்தம் உறாது வராத வேதாந்த
அருத்த விஞ்ஞானம் ஆர்க்கும் உண்டாமே.

6. யோசனை மூன்றாம் இத்தல வாசர்க்கு
ஆசறு தீக்ஷையாதி இன்றியும் என்
பாசமில் சாயுச்சியம் பயக்கும்மே
ஈசனாம் என்றன் ஆணையி னானே.

தேவியுரை
(வேறு)

7. என்றுமே அறவோர் அன்பர்க்கு
இருப்பிடம் இத்தலம் தான்
பொன்றுவார் பிறர்க்கு இன்னா உன்
புன்மையர் பன்னோய் துன்னி
ஒன்றுறாது ஒழியும் தீயோர்
உரன் ஒரு கணத்து இங்கு அங்கிக்
குன்று உரு அருணை ஈசன்
கோப வெந்தழல் விழாதே.

ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

பாயிரம்

(விருத்தம்)

தருணா ருணமணி கிரணா வலிநிகர்
தரும் அக்ஷரமண மகிழ்மாலை
தெருள் நாடிய திரு அடியார் தெருமரல்
தெளியப் பரவுதல் பொருளாகக்
கருணா கரமுனி ரமணா ரியன்
உவகையினால் சொலியது கதியாக
அருணாசலம் என அகமே அறிவொடும்
ஆழ்வார் சிவனுலகு ஆள்வாரே.

– முருகனார்

1. ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை

(காப்பு)

அருணாசல வரற்கு ஏற்ற அக்ஷரமணமாலை சாற்றக்
கருணாகர கணபதியே கரம் அருளிக் காப்பாயே.

(நூல்)

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா!
அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா!

1. அருணாசலம் என அகமே நினைப்பவர்
அகத்தை வேரறுப்பாய் அருணாசலா (அ)

2. அழகு சுந்தரம்போல் அகமும் நீயும் முற்று
அபின்னமாய் இருப்போம் அருணாசலா (அ)

3. அகம் புகுந்து ஈர்த்து உன் அக குகை சிறையாய்
அமர்வித்தது என்கொல் அருணாசலா (அ)

4. ஆருக்கா எனை ஆண்டனை அகற்றிடில்
அகிலம் பழித்திடும் அருணாசலா (அ)

5. இப்பழி தப்பு, உனை ஏன் நினைப்பித்தாய்
இனியார் விடுவார் அருணாசலா (அ)

6. ஈன்றிடும் அன்னையின் பெரிதருள் புரிவோய்
இதுவோ உனது அருள் அருணாசலா (அ)

7. உனை ஏமாற்றி ஓடாது உளத்தின் மேல்
உறுதியாய் இருப்பாய் அருணாசலா (அ)

8. ஊர் சுற்று உளம் விடாது உனைக் கண்டு அடங்கிட
உன் அழகைக் காட்டு அருணாசலா (அ)

9. எனை அழித்து இப்போது எனைக் கலவாவிடில்
இதுவோ ஆண்மை அருணாசலா (அ)

10. ஏனிந்த உறக்கம் எனைப்பிறர் இழுக்க
இது உனக்கு அழகோ அருணாசலா (அ)

11. ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது
அகத்தில் நீ இலையோ அருணாசலா (அ)

12. ஒருவன் ஆம் உன்னை ஒளித்து எவர் வருவார்
உன் சூதேயிது அருணாசலா (அ)

13. ஓங்காரப் பொருள் ஒப்பு உயர்வு இல்லோய்
உனை யார் அறிவார் அருணாசலா (அ)

14. ஔவை போல் எனக்குன் அருளைத் தந்து எனை
ஆளுவது உன் கடன் அருணாசலா (அ)

15. கண்ணுக்குக் கண்ணாய்க் கண் இன்றிக்காண் உனைக்
காணுவது எவர் பார் அருணாசலா (அ)

16. காந்தம் இரும்புபோல் கவர்ந்து எனை விடாமல்
கலந்து எனோடு இருப்பாய் அருணாசலா (அ)

17. கிரி உரு ஆகிய கிருபைக் கடலே
கிருபை கூர்ந்து அருளுவாய் அருணாசலா (அ)

18. கீழ்மேல் எங்கும் கிளர் ஒளி மணி என்
கீழ்மையைப் பாழ் செய் அருணாசலா (அ)

19. குற்றம் முற்று அறுத்து எனைக் குணமாய்ப் பணித்தாள்
குரு உருவாய் ஒளிர் அருணாசலா (அ)

20. கூர்வாட் கண்ணியர் கொடுமையில் படாது அருள்
கூர்ந்து எனைச் சேர்ந்து அருள் அருணாசலா (அ)

21. கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமும் இரங்கிலை
அஞ்சல் என்றே அருள் அருணாசலா (அ)

22\. கேளாது அளிக்கும் உன் கேடு இல் புகழைக்
கேடு செய்யாது அருள் அருணாசலா (அ)

23\. கையினில் கனி உன் மெய்ரசம் கொண்டு உவகை
வெறி கொள அருள் அருணாசலா (அ)

24\. கொடியிட்டு அடியரைக் கொல் உனைக் கட்டிக்
கொண்டு எங்ஙன் வாழ்வேன் அருணாசலா (அ)

25\. கோபம் இல் குணத்தோய் குறியாய் எனைக்கொளக்
குறை என்செய்தேன் அருணாசலா (அ)

26\. கௌதமர் போற்றும் கருணை மாமலையே
கடைக்கணித்து ஆள்வாய் அருணாசலா (அ)

27. சகலமும் விழுங்கும் கதிர் ஒளி இன(ன்) மன
சலசம் அலர்த்தியிடு அருணாசலா (அ)

28. சாப்பாடு உன்னைச் சார்ந்து உணவா யான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா (அ)

29. சித்தம் குளிரக் கதிர் அத்தம் வைத்து அமுத
வாயைத்திற அருண்மதி அருணாசலா (அ)

30. சீரை அழித்து நிர்வாணமாச் செய்து அருள்
சீரை அளித்து அருள் அருணாசலா (அ)

31. சுகக்கடல் பொங்கச் சொல் உணர்வு அடங்கச்
சும்மா பொருந்திடு அங்கு அருணாசலா (அ)

32. சூது செய்து என்னைச் சோதியாது இனி உன்
ஜோதி உருக்காட்டு அருணாசலா (அ)

33. செப்படி வித்தை கற்று இப்படி மயக்கு விட்டு
உருப்படு வித்தை காட்டு அருணாசலா (அ)

34. சேராய் எனில் மெய் நீராய் உருகிக் கண்ணீர்
ஆற்று அழிவேன் அருணாசலா (அ)

35. சை எனத் தள்ளில் செய்வினை சுடும் அலால்
உய்வகை ஏது உரை அருணாசலா (அ)

36. சொல்லாது சொலி நீ சொல் அற நில் என்று
சும்மா இருந்தாய் அருணாசலா (அ)

37. சோம்பியாய்ச் சும்மா சுகம் உண்டு உறங்கிடில்
சொல் வேறு என் கதி அருணாசலா (அ)

38. சௌரியம் காட்டினை சழக்கு அற்றது என்றே
சலியாது இருந்தாய் அருணாசலா (அ)

39. ஞமலியில் கேடா நான் என் உறுதியால்
நாடி நின் உறுவேன் அருணாசலா (அ)

40. ஞானம் இல்லாது உன் ஆசையால் தளர்வு அற
ஞானம் தெரித்தருள் அருணாசலா (அ)

41. ஞிமிறுபோல் நீயும் மலர்ந்திலை என்றே
நேர் நின்றனை என் அருணாசலா (அ)

42. தத்துவம் தெரியாது அத்தனை உற்றாய்
தத்துவம் இது என் அருணாசலா (அ)

43. தானே தானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா (அ)

44. திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண் காண்
தெரியும் என்றனை என் அருணாசலா (அ)

45. தீரம் இல் அகத்தில் தேடி உந்தனை யான்
திரும்ப உற்றேன் அருள் அருணாசலா (அ)

46. துப்பறிவு இல்லா இப்பிறப்பு என் பயன்
ஒப்பிட வாய் ஏன் அருணாசலா (அ)

47. தூய்மன மொழியர் தோயும் உன் மெய் அகம்
தோயவே அருள் என் அருணாசலா (அ)

48. தெய்வம் என்று உன்னைச் சாரவே என்னைச்
சேர ஒழித்தாய் அருணாசலா (அ)

49. தேடாது உற்ற நல் திருவருள் நிதி அகத்
தியக்கம் தீர்த்து அருள் அருணாசலா (அ)

50. தைரிய்மோடும் உன் மெய் அகம் நாட யான்
தட்டழிந்தேன் அருள் அருணாசலா (அ)

51. தொட்டு அருட்கை மெய் கட்டிடாய் எனில் யான்
நட்டமாவேன் அருள் அருணாசலா (அ)

52. தோடம் இல் நீ அகத்தோடு ஒன்றி என்றும்
சந்தோடம் ஒன்றிட அருள் அருணாசலா (அ)

53. நகைக்கு இடம் இலை நின் நாடிய எனை அருள்
நகையிட்டுப் பார் நீ அருணாசலா (அ)

54. நாணிலை நாடிட நானாய் ஒன்றி நீ
தாணுவா நின்றனை அருணாசலா (அ)

55. நின் எரி எரித்து எனை நீறு ஆக்கிடுமுன்
நின் அருள் மழை பொழி அருணாசலா (அ)

56. நீ நான் அறப்புலி நிதம் களிமயமா
நின்றிடும் நிலை அருள் அருணாசலா (அ)

57. நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட
எண்(ண) அலை இறும் என்று அருணாசலா (அ)

58. நூலறிவு அறியாப் பேதையன் என்தன்
மால் அறிவு அறுத்து அருள் அருணாசலா (அ)

59. நெக்கு நெக்கு உருகி யான் புக்கிட உனைப்புகல்
நக்கனா நின்றனை அருணாசலா (அ)

60. நேசம் இல் எனக்கு உன் ஆசையைக் காட்டி நீ
மோசம் செயாது அருள் அருணாசலா (அ)

61. நைந்து அழி கனியால் நலன் இலை பதத்தில்
நாடி உட்கொள் நலம் அருணாசலா (அ)

62. நொந்திடாது உன்தனைத் தந்து எனைக் கொண்டிலை
அந்தகன் நீ எனக்கு அருணாசலா (அ)

63. நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவம்
ஆக்கி நீ ஆண்டு அருள் அருணாசலா (அ)

64. பற்றி மால்விடம் தலையுற்று இறுமுனம் அருள்
பற்றிட அருள்புரி அருணாசலா (அ)

65. பார்த்தருள் மால் அறப் பார்த்திலை எனின் அருள்
பார் உனக்கு ஆர் சொல்வர் அருணாசலா (அ)

66. பித்துவிட்டு உனை நேர் பித்தன் ஆக்கினை அருள்
பித்தம் தெளி மருந்து அருணாசலா (அ)

67. பீதிஇல் உனைச் சார் பீதியில் எனைச்சேர்,
பீதி உன் தனக்கு ஏன் அருணாசலா (அ)

68. புல்லறிவு ஏது உரை நல்லறிவு ஏது உரை
புல்லிடவே அருள் அருணாசலா (அ)

69. பூமண மா மனம் பூரண மணம் கொளப்
பூரண மணம் அருள் அருணாசலா (அ)

70. பெயர் நினைத்திடவே பிடித்து இழுத்தனை உன்
பெருமை யார் அறிவார் அருணாசலா (அ)

71. பேய்த்தனம் விட விடாப்பேயாப் பிடித்து எனைப்
பேயன் ஆக்கினை என் அருணாசலா (அ)

72. பைங்கொடியா நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக் கோடாய்க் கா அருணாசலா (அ)

73. பொடியான் மயக்கி என் போதத்தைப் பறித்து உன்
போதத்தைக் காட்டினை அருணாசலா (அ)

74. போக்கும் வரவும் இல் பொது வெளியினில் அருட்
போராட்டம் காட்டு அருணாசலா (அ)

75. பௌதிகம் ஆம் உடல் பற்று அற்று நாளும் உன்
பவிசு கண்டுற அருள் அருணாசலா (அ)

76. மலைமருந்து இட நீ மலைத்திடவோ அருள்
மலை மருந்தாய் ஒளிர் அருணாசலா (அ)

77. மானங்கொண்டு உறுபவர் மானத்தை அழித்து
அபிமான மில்லாது ஒளிர் அருணாசலா (அ)

78. மிஞ்சிடில் கெஞ்சிடும் கொஞ்ச அறிவன்யான்
வஞ்சியாது அருள் எனை அருணாசலா (அ)

79. மீகாமன் இல்லாமல் மாகாற்று அலை கலம்
ஆகாமல் காத்தருள் அருணாசலா (அ)

80. முடி அடி காணா முடி விடுத்து அனைநேர்
முடிவிடக் கடனிலை அருணாசலா (அ)

81. மூக்கிலன் முன்காட்டும் முகுரம் ஆகாது எனைத்
தூக்கி அணைந்து அருள் அருணாசலா (அ)

82. மெய்யகத்தின் மன மென்மலர் அணையில் நாம்
மெய் கலந்திட அருள் அருணாசலா (அ)

83. மேன்மேல் தாழ்ந்திடும் மெல்லியர்ச் சேர்ந்து நீ
மேன்மை உற்றனை என் அருணாசலா (அ)

84. மை மயல் நீத்து அருள் மையினால் உனது உண்மை
வசம் ஆக்கினை அருணாசலா (அ)

85. மொட்டை அடித்தெனை வெட்ட வெளியில் நீ
நட்டம் ஆடினை என் அருணாசலா (அ)

86. மோகம் தவிர்த்து உன் மோகமா வைத்தும் என்
மோகம் தீராய் என் அருணாசலா (அ)

87. மௌனியாய்க் கல்போல் மலராது இருந்தால்
மௌனம் இது ஆமோ அருணாசலா (அ)

88. யவன் என் வாயில் மண்ணினை அட்டி
என் பிழைப்பு ஒழித்தது அருணாசலா (அ)

89. யாரும் அறியாது என் மதியினை மருட்டி
எவர் கொளை கொண்டது அருணாசலா (அ)

90. ரமணன் என்று உரைத்தேன் ரோசம் கொளாது
எனை ரமித்திடச் செயவா அருணாசலா (அ)

91. ராப்பகல் இல்லா வெறு வெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா (அ)

92. லட்சியம் வைத்து அருள் அஸ்திரம் விட்டு எனைப்
பட்சித்தாய் பிராணனோடு அருணாசலா (அ)

93. லாபம் நீ இகபர லாபம் இல் எனை உற்று
லாபம் என் உற்றனை அருணாசலா (அ)

94. வரும்படி சொலிலை வந்துஎன் படிஅள
வருந்திடு உன் தலைவிதி அருணாசலா (அ)

95. வாவென்று அகம் புக்கு உன் வாழ்வு அருள் அன்றே
என் வாழ்வு இழந்தேன் அருள் அருணாசலா (அ)

96. விட்டிடில் கட்டமாம் விட்டிடாது உனை உயிர்
விட்டிட அருள்புரி அருணாசலா (அ)

97. வீடு விட்டு ஈர்த்து உள வீடு புக்குப் பைய உன்
வீடு காட்டினை அருள் அருணாசலா (அ)

98. வெளிவிட்டேன் உன்செயல் வெறுத்திடாது உன் அருள்
வெளிவிட்டு எனைக்கா அருணாசலா (அ)

99. வேதாந்தத்தே வேறு அற விளங்கும்
வேதப் பொருள் அருள் அருணாசலா (அ)

100. வைதலை வாழ்த்தா வைத்து அருட்குடியா
வைத்து எனை விடாது அருள் அருணாசலா (அ)

101. அம்புவில் ஆலிபோல் அன்பு உரு உனில் எனை
அன்பாக் கரைத்து அருள் அருணாசலா (அ)

102. அருணை என்று எண்ண யான் அருள் கண்ணி பட்டேன்
உன் அருள்வலை தப்புமோ அருணாசலா (அ)

103. சிந்தித்து அருள்படச் சிலந்திபோல் கட்டிச்
சிறையிட்டு உண்டனை அருணாசலா (அ)

104. அன்பொடு உன் நாமம் கேள் அன்பர்தம் அன்பருக்கு
அன்பன் ஆயிட அருள் அருணாசலா (அ)

105. என்போலும் தீனரை இன்புறக் காத்து நீ
எந்நாளும் வாழ்ந்து அருள் அருணாசலா (அ)

106. என்புருகு அன்பர்தம் இன் சொற்கொள் செவியும் என்
புன் மொழி கொள அருள் அருணாசலா (அ)

107\. பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்து அருள் இஷ்டம் பின் அருணாசலா(அ)

108\. மாலையளித்து அருணாசல ரமண என்
மாலை அணிந்து அருள் அருணாசலா (அ)

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா!
அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலா!

அருணாசலம் வாழி அன்பர்களும் வாழி
அக்ஷர மணமாலை வாழி.

2. ஸ்ரீ அருணாசல நவமணிமாலை

(வெண்பா)

1. அசலனே ஆயினும் அச்சவை தன்னில்
அசலையாம் அம்மை எதிர் ஆடும் — அசல
உருவில் அச்சத்தி ஒடுங்கிட ஓங்கும்
அருணாசலம் என்று அறி.

(கட்டளைக்கலித்துறை)

2. சத்திய சித்சுகம் அன்றிப் பரஉயிர் சார் அயிக்கம்
அர்த்த(ம்) அத் தத்வமசி அருணப் பொருளாம் அசலத்து
அர்த்தம் கனம் அது ஆகும் செவ் ஆடக ஆர் ஒளியாம்
முத்தி நினைக்க அருள் அருணாசலம் உன்னிடவே.

(விருத்தம்)

3. அருணாசலத்தில் உறு கருணாகரப் பரமன்
அருண அரவிந்த பதமே
பொருள் நாடு சுற்றமொடு வருணாதி பற்றி உளம்
மருள் நாடல் அற்று நிதமும்
தெருள் நாடு உளத்தினில் நல் அருள் நாடி நிற்குமவர்
இருள் நாசமுற்று புவிமேல்
தருணாருணக் கதிரின் அருள் நாளும் உற்று சுக
வருண ஆலயத்தில் இழிவார்.

(வேறு)

4. அண்ணாமலை உனை எண்ணான் என எனை
அண்ணாந்து ஏங்கிட எண்ணாதே
மண்ணாம் மல உடல் எண்ணா அகம் என
மண்ணா மாய்ந்திட ஒண்ணாதே

தண் ஆர் அளிசெறி கண் நாடு ஒரு கிறி
பண்ணாது என் இரு கண்ணாளா
பெண் ஆண் அலி உரு நண்ணா ஒளி உரு
அண்ணால் என் அகம் நண்ணாயே.

(வேறு)

5. சீரான சோணகிரி சிறக்க வாழும்
சித்சொருபனாம் இறையே சிறியனேன் தன்
பேரான பிழை எல்லாம் பொறுத்துக் காத்துப்
பின்னும் இவன் பாழிதனில் வீழாவண்ணம்
காரான கருணைவிழி கொடுப்பாய் இன்றேல்
கடும் பவத்தினின்று கரை ஏறமாட்டேன்
நேர் ஆனது உண்டோ,தாய் சிசுவுக்கு ஆற்றும்
நிகர் அற்ற நலனுக்கு நிகழ்த்துவாயே.

(வேறு)

6. காமாரி என்று நீ அன்பரால் என்றுமே
கதித்திடப் படுகின்றாய்
ஆமாம் மெய் உனக்கிது ஆமா என்று ஐயுறும்
அருணாசலேச்சுரனே
ஆம் ஆயின் எங்ஙனம் தீரனே சூரனே
ஆயினும் வல் அனங்கன்
காமாரியாகும் உன் கால் அரண் சரண் புகு
கருத்தினுள் புக வலனே.

(வேறு)

7. அண்ணா மலையாய் அடியேனை
ஆண்ட அன்றே ஆவி உடல்
கொண்டாய் எனக்கு ஓர் குறை உண்டோ
குறையும் குணமும் நீ அல்லால்

எண்ணேன் இவற்றை என் உயிரே
எண்ணம் எதுவோ அது செய்வாய்
கண்ணே உன்தன் கழல் இணையில்
காதல் பெருக்கே தருவாயே.

(வேறு)

8. புவிக்குள் பொங்கிடும் புவிச்சொல் புங்கவன்
புரிக்குள் புண்ணியன் சுழிக்குள் சுந்தரன்
தவற்குச் சுந்தரன் சதிக்கு உற்புன்னனந்
தலத்தில் புன்புலன் சழக்கில் துன்புறும்
தவிக்குத் துஞ்சிடும் படிக்குத் தன் உளம்
தழைக்கத் தன்பதம் எனக்குத் தந்தனன்
சிவக்கச் சின்மயம் செழிக்கத் தன்மயம்
செகத்தில் துன்னு செம்பொருப்புச் செம்மலே

(கட்டளைக்கலித்துறை)

9. அம்மையும் அப்பனுமாய் எனைப் பூமியில் ஆக்கி அளித்து
அம்மகி மாயை என் ஆழ்கடல் வீழ்ந்து யான் ஆழ்ந்திடுமுன்
என் மனம் மன்னி இழுத்து உன் பதத்தில் இருத்தினையால்
சின்மயனாம் அருணாசல நின் அருள் சித்ரம் என்னே.

3. ஸ்ரீ அருணாசல பதிகம்

(எழுசீர் விருத்தம்)

1. கருணையால் என்னை ஆண்ட நீ எனக்கு உன்
காட்சி தந்து அருளிலை என்றால்
இருள் நலி உலகில் ஏங்கியே பதைத்து இவ்
உடல் விடில் என் கதி என்னாம்
அருணனைக் காணாது அலருமோ கமலம்
அருணனுக்கு அருணனா மன்னி
அருள் நனி சுரந்து அங்கு அருவியாய்ப் பெருகும்
அருண மாமலை எனும் அன்பே.

2. அன்புரு அருணாசல அழல் மெழுகாய்
அகத்து உனை நினைந்து நைந்து உருகும்
அன்பு இலி எனக்கு உன் அன்பினை அருளாது
ஆண்டு எனை அழித்திடல் அழகோ

அன்பினில் விளையும் இன்பமே அன்பர்
அகத்தினில் ஊறும் ஆர் அமுதே
என் புகலிடம் நின் இட்டம் என் இட்டம்
இன்பு அது எற்கு என் உயிர் இறையே.

3. இறை உனை நினையும் எண்ணமே நண்ணா
எனை உனது அருள் கயிற்றால் ஈர்த்து
இறை உயிர் இன்றிக் கொன்றிட நின்றாய்
என் குறை இயற்றினன் ஏழை
இறை இனிக்குறை என் குற்றுயிர் ஆக்கி
எனை வதைத்திடல் எதற்கு இங்ஙன்
இறைவனாம் அருணாசல எணம் முடித்தே
ஏகனா வாழி நீடூழி.

4. ஊழியில் வாழும் மாக்களில் என் பால்
ஊதியம் யாது நீ பெற்றாய்
பாழினில் வீழாது ஏழையைக் காத்து உன்
பதத்தினில் இருத்தி வைத்தனையே
ஆழியாம் கருணை அண்ணலே எண்ண
அகம் மிக நாண நண்ணிடுமால்
வாழிநீ அருணாசல உனை வழுத்தி
வாழ்த்திடத் தாழ்த்தும் என் தலையே.

5. தலைவ நீ என்னைக் களவினில் கொணர்ந்து உன்
தாளில் இந்நாள் வரை வைத்தாய்
தலைவ நின் தன்மை என்ன என்பார்க்குத்
தலைகுனி சிலையென வைத்தாய்

தலைவ நான் வலைமான் தனை நிகராது என்
தளர்வினுக்கு அழிவு நாடிடுவாய்
தலைவனாம் அருணாசல உளம் ஏதோ
தமியன் ஆர் தனை உணர்தற்கே.

6. தற்பர நாளும் தாளினில் தங்கித்
தண்டு அலர் மண்டுகம் ஆனேன்
சிற்பத நல்தேன் உண்மலர் அளியாச்
செய்திடில் உய்தி உண்டு உன்தன்
நற்பதப் போதில் நான் உயிர் விட்டால்
நட்ட தூணாகும் உன் பழியே
வெற்பு உரு அருண விரிகதிர் ஒளியே
விண்ணினும் நுண் அருள் வெளியே.

7. வெளிவளி தீநீர் மண் பலஉயிரா
விரிவுறு பூத பௌதிகங்கள்
வெளி ஒளி உன்னையன்றி இன்று என்னின்
வேறு யான் ஆர் உளன் விமலா
வெளியதாய் உளத்து வேறு அற விளங்கின்
வேறு என வெளி வருவேன் ஆர்
வெளிவராய் அருணாசல அவன் தலையில்
விரிமலர்ப் பதத்தினை வைத்தே.

8. வைத்தனை வாளா வையகத்து உய்யும்
வழி அறி மதி அழித்து இங்ஙன்
வைத்திடில் ஆர்க்கும் இன்பு இலை துன்பே
வாழ்வு இதில் சாவதே மாண்பாம்

பைத்தியம் பற்றிப் பயன் அறும் எனக்கு உன்
பதம் உறும் அருமருந்து அருள்வாய்
பைத்திய மருந்தாப் பார் ஒளிர் அருண
பருப்பத உருப்பெறு பரனே.

9. பரம நின் பாதம் பற்று அறப் பற்றும்
பர அறி(வு) வறியரில் பரமன்
பரம் உனக்கு என என் பணி அறப்பணியாய்
பரித்திடும் உனக்கு எது பாரம்
பரமநிற் பிரிந்து இவ்வுலகினைத் தலையில்
பற்றி யான் பெற்றது போதும்
பரமனாம் அருணாசல எனை இனி உன்
பதத்தினின்று ஒதுக்குறப் பாரேல்.

10. பார்த்தனன் புதுமை உயிர்வலி காந்த
பருவதம் ஒருதரம் இதனை
ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி
ஒரு தனது அபிமுகமாக
ஈர்த்து அதைத் தன்போல் அசலமாச் செய்து அவ்
இன் உயிர் பலி கொளும் இஃது என்
ஓர்த்து உய்மின் உயிர்காள் உளம் அதில் ஒளிர்இவ்
உயிர்க் கொலி அருணமா கிரியே.

11. கிரி இது பரமாக் கருதிய என்போல்
கெட்டவர் எத்தனை கொல்லோ
விரிதுயரால் இப்பிழைப்பினில் விழைவு
விட்டு உடல் விட்டிட விரகு

கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகால்
கருதிடக் கொலாமலே கொல்லும்
அரு மருந்து ஒன்று உண்டு அவனியில் அதுதான்
அருண மாதிரம்என அறிவீர்.

4. ஸ்ரீ அருணாசல அஷ்டகம்

(எண்சீர் விருத்தம்)

1. அறிவு அறு கிரியென அமர்தரும் அம்மா
அதிசயம் இதன் செயல் அறிவரிது ஆர்க்கும்
அறிவு அறு சிறு வயது அது முதல் அருணா
சலம் மிகப் பெரிது என அறிவின் இலங்க
அறிகிலன் அதன் பொருள் அது திருவண்ணா
மலை என ஒருவரால் அறிவு உறப் பெற்றும்
அறிவினை மருள் உறுத்து அருகினில் ஈர்க்க
அருகு உறும் அமயம் இது அசலமாக் கண்டேன்.

2. கண்டவன் எவன் எனக் கருத்தின் உள் நாடக்
கண்டவன் இன்றிட நின்றது கண்டேன்
கண்டனன் என்றிடக் கருத்து எழவில்லை
கண்டிலன் என்றிடக் கருத்து எழுமாறென்

விண்டு இது விளக்கிடு விறல் உறுவோன் ஆர்
விண்டிலை பண்டு நீ விளக்கினை என்றால்
விண்டிடாது உன்நிலை விளக்கிட என்றே
விண் தலம் அசலமா விளங்கிட நின்றாய்.

3. நின்னையான் உரு என எண்ணியே நண்ண
நிலமிசை மலை எனும் நிலையினை நீதான்
உன் உரு அரு என உன்னிடின் விண் நோக்கு
உற உலகு அலைதரும் ஒருவனை ஒக்கும்
உன் உரு உனல் அற உன்னிட முந்நீர்
உறு சருக்கரை உரு என உரு ஓயும்
என்னை யான் அறிவுற என் உரு வேறு ஏது
இருந்தனை அருணவான் கிரியென இருந்தோய்.

4. இருந்து ஒளிர் உனை விடுத்து அடுத்திடல் தெய்வம்
இருட்டினை விளக்கு எடுத்து அடுத்திடலே காண்
இருந்து ஒளிர் உனை அறிவுறுத்திடற்கு என்றே
இருந்தனை மதந்தொறும் விதவித உருவாய்
இருந்து ஒளிர் உனை அறிகிலர் எனில் அன்னோர்
இரவியின் அறிவு அறு குருடரே ஆவார்
இருந்து ஒளிர் இரண்டற எனது உளத்து ஒன்றாய்
இணையறும் அருண மாமலை எனும் மணியே.

5. மணிகளிற் சரடு என உயிர்தொறும் நானா
மதந்தொறும் ஒருவனா மருவினை நீதான்
மணி கடைந்து என மனம் மனமெனும் கல்லில்
மறு அறக்கடைய நின் அருள் ஒளி மேவும்

மணி ஒளி எனப் பிறிது ஒரு பொருள் பற்றும்
மருவுறல் இலை நிழல் படி தகட்டின் விண்
மணி ஒளி பட நிழல் பதியுமோ உன்னின்
மறுபொருள் அருண நல் ஒளிமலை உண்டோ.

6. உண்டு ஒரு பொருள் அறிவொளி உளமே நீ
உளது உனில் அலது இலா அதிசய சத்தி
நின்று அணு நிழல் நிரை நினைவு அறிவோடே
நிகழ்வினைச் சுழலில் அந்நினைவு ஒளி ஆடி
கண்டன நிழல் சக விசித்திரம் உள்ளும்
கண் முதல் பொறி வழி புறத்தும் ஓர் சில்லால்
நின்றிடு நிழல்பட நிகர்அருட் குன்றே
நின்றிட சென்றிட நினைவிட இன்றே.

7. இன்று அகம் எனும் நினைவு எனில் பிற ஒன்றும்
இன்று அது வரை பிற நினைவு எழில் ஆர்க்கு எற்கு
ஒன்று அகம் உதிதலம் எது என உள் ஆழ்ந்து
உளத்தவிசு உறின் ஒரு குடை நிழற் கோவே
இன்று அகம் புறம் இரு வினை இறல் சன்மம்
இன்பு துன்பு இருள் ஒளி எனும் கனவு இதய
மன்றகம் அசலமா நடமிடும் அருண
மலை எனும் எலையறும் அருள் ஒளிக் கடலே.

8. கடல் எழும் எழிலியால் பொழிதரும் நீர்தான்
கடல்நிலை அடைவரை தடை செயின் நில்லாது
உடல் உயிர் உனில் எழும் உனை உறு வரையில்
உறுபல வழிகளில் உழலினும் நில்லாது

49

இடவெளி அலையினும் நிலையிலை புள்ளுக்கு
இடம் நிலம் அலது இலை வருவழி செல்லக்
கடன் உயிர் வருவழி சென்றிட இன்பக்
கடல் உனை மருவிடும் அருண பூதரனே.

5. ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம்

(வெண்பா)

1. அருள் நிறைவான அமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கும் — அருண
கிரி பரமான்மாவே கிளர் உளப்பூ நன்றாய்
விரி பரிதியாக விளங்கு.

2. சித்திரமாம் இஃது எல்லாம் செம்மலையே நின்பாலே
உத்திதமாய் நின்றே ஒடுங்கிடுமால் — நித்தியமும்
நான் என்று இதயம் நடித்திடுவையால் உன்பேர்
தான் இதயம் என்றிடுவர் தாம்.

3. அகமுகம் ஆர் அந்த அமலமதி தன்னால்
அகம் இதுதான் எங்கு எழும் என்று ஆய்ந்தே — அக உருவை
— நன்கு அறிந்து முந்நீர் நதிபோலும் ஓயுமே
உன் கண் அருணாசலனே ஓர்.

4. வெளி விடயம் விட்டு விளங்கும் அருணேசா
வளிஅடக்க நிற்கும் மனத்தால் — உளம் அதனில்
உன்னைத் தியானித்து யோகி ஒளிகாணும்
உன்னில் உயர்வுறும் ஈது உன்.

5. உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்
உன்னைக் கண்டு எல்லாமும் உன் உருவாய் — அன்னியம் இல்
அன்பு செயும் அன்னோன் அருணாசலா வெல்கும்
இன்பு உருவாம் உன்னில் ஆழ்ந்தே.

அருணகிரி ரமணன் ஆரியத்திற் கண்ட
அருமறை அந்தக் கருத்தே ஆகும் — அருணா
சல பஞ்சக மணியைத் தண் தமிழ் வெண்பாவால்
உலகுக்கு அளித்தான் உவந்து.

தனி

(விருத்தம்)

அரியாதி இதர சீவரது அக வாரிச குகையில்
அறிவாய் ரமி பரமாத்துமன் அருணாசல ரமணன்
பரிவால் உளம் உருகா நல பரன் ஆர்ந்திடு குகை ஆர்ந்து
அறிவாம் விழிதிறவா நிசம் அறிவாய் அது வெளியாம்.

வாழ்த்து

வாழ்க வான் அருணாசல வண்பெயர்
வாழ்க அப்பெயர் வாய் துதி பஞ்சகம்
வாழ்க வாய்மலர் மா ரமணன் பதம்
வாழ்க அப்பதம் மன்னு நல் அன்பரே.

ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சகம் முற்றிற்று

உபதேச மணிகள்

1. சர்வ அறிவிற்கும் சர்வ தொழிலுக்கும் காரணமாகிய மனம் அடங்கினால் ஜகதிருஷ்டி நீங்கும்.

2. கற்பிதமான ஜகதிருஷ்டி நீங்கினாலொழிய அதிஷ்டான சொரூப தரிசனம் உண்டாகாது.

3. நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்றபோது, தனியாய் மனம் என்றோர் பொருளில்லை. நினைவே மனதின் சொரூபம். நினைவு களைத் தவிர்த்து ஜகமென்றோர் பொருள் அன்னியமாயில்லை.

4. சிலந்திப் பூச்சி எப்படித் தன்னிடமிருந்து வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக் கொள்கிறதோ அப்படியே மனமும் தன்னிடத்திலிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக் கொள்கிறது.

5. நான் என்னும் நினைவு கிஞ்சித்தும் இல்லாத இடமே சொரூபமாகும். அதுவே 'மௌனம்' எனப்படும். இவ்வாறு சும்மா இருப்பதற்குத் தான் 'ஞான திருஷ்டி' என்று பெயர். சும்மா இருப்பதாவது மனத்தை ஆத்மசொரூபத்தில் லயிக்கச் செய்வதே. அன்றி, பிறர் கருத்தறிதல், முக்காலமுணர்தல், தூரதேசத்தில் நடப்பன வறிதல் ஆகிய இவை ஞானதிருஷ்டி ஆகமாட்டா.

6. எல்லா நியமங்களிலும் சிறந்த மித ஸாத்விக ஆகார நியமத்தால் மனத்தின் சத்வ குணம் விருத்தியாகி, ஆத்ம விசாரத்திற்கு சகாயமுண்டாகிறது.

7. மனத்தின்கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ, அதுவரையில் நானாரென்னும் விசாரணையும் வேண்டும்.

8. அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்கியம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம். உண்மையில் இரண்டும் ஒன்றே.

9. ஆன்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்றும் இடங்கொடாமல் ஆத்ம நிஷ்டாபரனாயிருப்பதே தன்னை ஈசனுக்கு அளிப்பதாம்.

10. ஜகமென்பது நினைவே. ஜகம் மறையும்போது, அதாவது நினைவற்றபோது மனம் ஆனந்தத்தை அனுபவிக்கின்றது; ஜகம் தோன்றும்போது அது துக்கத்தை அனுபவிக்கின்றது.

11. எந்நூலிலும் முக்தியடைவதற்கு மனத்தையடக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளபடியால் மனோ நிக்ரகமே நூல்களின் முடிவான கருத்து என்று அறிந்து கொண்ட பின்பு நூல்களை அளவின்றிப் படிப்பதால் பயனில்லை.

12. நல்லமனம் என்றும் கெட்டமனம் என்றும் இரண்டு மனங்களில்லை. மனம் ஒன்றே. வாசனைகளே சுபம் என்றும் அசுபம் என்றும் இரண்டு விதம்.


13. பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினாலும் அவர்களை வெறுத்தல் ஆகாது. விருப்பு வெறுப்புக்கள் இரண்டும் வெறுக்கத்தக்கன. பிரபஞ்ச விஷயங்களில் அதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமான வரையில் அன்னியர் காரியத்தில் பிரவேசிக்கக் கூடாது.

14. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்கிறான். எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையுண்டு.

– பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள்

வட இந்திய முகம்மதிய பேராசிரியர் ஒருவர் ஸ்ரீ பகவானிடம் ஒருசமயம் வினவியதாவது: ''அத்வைதியாகிய தாங்கள் எவ்வாறு அருணாசலத்தை வேறொரு உருவமாய், உங்களுக்கு அன்னியமாய்ப் பாடமுடிந்தது?'' இக்கேள்விக்கு ஸ்ரீ பகவான் கூறியதாவது: 'பக்தன், கடவுள், துதி அனைத்துமே பரமான்மாதான். நீங்கள் உங்களை, உங்களுடைய தேகத்துடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளும்போது, ஒரு பக்தன் தன்னை ஏன் அருணாசலத்துடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளக்கூடாது?' ஜீவன் பரமான்மாவினின்று அன்னியமன்று என்ற உபநிடத வாக்கியத்தின் பொருளே ஸ்ரீ பகவானால் இவ்வாறு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வைந்து துதிப்பாடல்களும் நம்மில் விளங்கும் ''நான்'' யாரென்றும் அதுவே ''அருணாசலம்'' என்ற பரமான்மாவாக விளங்குவதையும் ஸ்ரீ ரமணர் நமக்கு ஐயம்திரிபற உபதேசிப்பதை நாம் நம்மில் ஆழ்ந்து உணர்ந்து உய்வோமாக!



அருணாசலசிவ அருணாசலசிவ

அருணாசலசிவ அருணாசலா!

அருணாசலசிவ அருணாசலசிவ

அருணாசலசிவ அருணாசலா!